


சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இர.பொன் இளவரசன் தலைமையில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் ஆர்.கே நகரில் நடைபெற்றது.இதில் தமிழ்நாடு அரசு கொறடா கோவி.செழியன் சிறப்புரையாற்றினார்.மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருண, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி,சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர்,ஆர்.கே.நகர் தொகுதி பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன்,பகுதி கழக செயலாளர் இரா.லட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர்.

### தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (21.5.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி அளவில், கோவை, கிஸ்கால் கிராண்ட் ஓட்டலில், விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா குறித்து

**'அண்ணா அறிவாலயம்"**
சென்னை 600 018.
நாள்: 19.5.2023.

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# தி.மு.க. மகளிர் - மகளிர் தொண்டரணிக் கூட்டம்!

### மகளிர் அணி – மகளிர் தொண்டரணி செயலாளர்கள் அறிவிப்பு!

தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு,சமூக வலைத்தளக்குழு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் (23.05.2023, செவ்வாய் கிழமை) அன்று காலை 11 மணியளவில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில், மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.
2.கழக ஆக்கப்பணிகள்

**ஜெ.ஹெலன் டேவிட்சன்,**
செயலாளர்,
தி.மு.க. மகளிரணி.

**நாமக்கல் ப.இராணி,**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டரணி


## 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

சென்னை, கோபாலபுரம், திருவீதியன் தெருவில் வசித்து காலஞ்சென்ற
நினைவில் வாழும் **நடராஜன் - லட்சுமி அம்மாள்**
அவர்களின் இளைய மகன்



## குமார் (எ) கிராமத்தெரு ந.தேசமுத்து

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி - 113-வது வட்ட முன்னாள் பகுதிப் பிரதிநிதி

தோற்றம் : 22 - 5 -1956 | மறைவு : 20 - 5 - 2021

**கண்ணுக்கு ஒளியாய் நெஞ்சத்தில் நினைவாய்!**
**நிலையாய் என்றும் எங்களோடு எங்களின் தெய்வமாய்!**
**என்றும் எங்களை வழிநடத்த வணங்குகிறோம்...**

நீங்கா நினைவுகளுடன்...
மனைவி : **தேச.விஜயலட்சுமி**
மகன்கள் : **தேச.கலையரசன் • தேச.முத்துகுமார்**
மகள் : **கோமதி பாலசுப்பிரமணி** மற்றும் **பேரப்பிள்ளைகள்**


### டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - இ.கருணாநிதி - எஸ்.ஆர்.ராஜா சிறப்புரை!

# செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்!

### ஏ.கே.கருணாகரன் வரவேற்புரை! க.வசந்தகுமாரி - எஸ்.மோகன் - கோ.காமராஜ் பங்கேற்பு!

காஞ்சிபுரம், மே 20 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (20.5.2023 - சனிக்கிழமை) மாலை 3 மணிக்கு இந்திரா கார்டன் மில் வளாகம் எம்.ஐ.டி. மேம்பாலம் அருகில் குரோம்பேட்டையில் நடைபெறுகிறது.

ஏ.வீரபத்திரன் தலைமை வகிக்கிறார்.

கே.பூபதி, சரஸ்வதி சந்திரசேகர், டி.கார்த்திக், சி.ஆர். மதுரைவீரன், எம்.பற்குணன், ஓ.தண்டபாணி, ஜி.ஜெகநாதன், பி.பால சந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தொகுதி பார்வையாளர் எஸ். மோகன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ். பெர்னார்ட், அ.தமிழ் மாறன், ந.நவீன், மு.ரஞ்சன், மு.நாகலிங்கம், க.ரமேஷ், த.ராஜாராமன், கே.தனசேகரன், ஜெ. ராகேஷ்சர்மா, வி.ராஜேஷ்,

வட்டக் கழகச் செயலாளர்கள் எம்.நாகராஜ், ஏ.ரங்கநாதன், எம்.சார்லஸ், ஆர். ராதாகிருஷ்ணன், ஜே.வி.சந்திரசேகர், எஸ்.மன்னா ராஜா கண்ணா, மாமன்ற உறுப்பினர்கள் என்.கண்ணன், சங்கீதா விஜய், மகாலட்சுமி கருணாகரன், சரண்யா மதுரைவீரன் மற்றும் முன்னாள் நகரமன்ற உறுப்பி பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதிக் கழக துணைச் செயலாளர் எச்.பாஸ்கரன் நன்றி கூறுகிறார்.

### அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு 4 % அகவிலைப்படி உயர்வு அறிவித்த

# முதல்வருக்கு - தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் நன்றி!

### அமைப்பின் பொதுச் செயலாளர் இரா.தாமோதரன் அறிக்கை!

சென்னை, மே 20 -

'தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகப் பொதுச் செயலாளர் இரா.தாமோதரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியினை 38 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக நான்கு சதவீதம் உயர்த்தி 01.04.2023 முதல் வழங்க ஆணையிட்டதற்கு தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், 'எதிர்வரும் காலங்களில் ஒன்றிய அரசு அகவிலைப்படி உயர்வினை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதனைப் பின்பற்றி அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வினை செயல்படுத்திடும்' என்ற கொள்கை முடிவினை அறிவித்திருப்பதற்காக தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் சங்கம் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறது.

இந்த அறிவிப்பின் மூலம், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்த பாதையில், தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களையும், சமூக நீதிச் செயல்பாடுகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மீது அக்கறை கொண்டது தன் தலைமையிலான தமிழ்நாடு அரசு என்பதை உறுதி செய்த முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி, நன்றி, நன்றி...!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, மக்கள் நலன், சமூகநீதி மற்றும் மாநில சுயாட்சி காக்கும் அரசு, தமிழக உயர்கல்வியை உயர்த்தும் அரசு, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் பேணும் அரசு என்பதை உறுதிப்படுத்தும் விதமாக புதிய பல அரசு கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகள் தொடங்குதல்;

அரசு கல்லூரிகளின் உள் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு;

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்டு உரிய நிதி ஒதுக்கீடுகள் மற்றும் பணியிடங்கள் ஒப்பளித்து அரசாணை;

'நான் முதல்வன்' திட்டம், புதுமைப்பெண் திட்டம் / 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மகளிர் உயர்கல்வி உறுதி திட்டம்' உள்ளிட்ட பல்வேறு மாணவர் நலன் சார்ந்த நலத்திட்டங்கள்;

தமிழ்நாட்டுக்கான தனித் தன்மையானதொரு கல்விக் கொள்கை வகுக்க குழு அமைத்தமை;

அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கான பணியிடமாறுதல் கலந்தாய்வு (ஆன்லைன்) நடத்துதல்;

பல ஆண்டுகளாக காலியாக உள்ள அரசு கல்லூரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 4000 ஆசிரியர்களை TRB மூலம் பணியமர்த்த நடவடிக்கை;

இக்கல்வியாண்டிலேயே, கூடுதலாக 1800 கௌரவ விரிவுரையாளர்களை நியமித்தமை;

கல்லூரி ஆசிரியர்களுக்கு 'மூத்தோரைக் காட்டிலும் இளையோர் கூடுதல் ஊதியம் பெறுதல்' தொடர்பான உரிய அரசாணை வழங்கியமை;

கல்லூரி ஆசிரியர்களுக்கான பணி மேம்பாடு (CAS LEVEL 10-11, 11-12 & 12-13A) பெற வழிவகை செய்தமை என பல்வேறு சாதனைகள் புரிந்து வரும் தமிழ்நாடு அரசு, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ அமைப்பின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை அடுத்தடுத்து நிறை வேற்றி வருவதற்கு தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அக்கழகத்தின் பொதுச் செயலாளர் இரா. தாமோதரன் தெரிவித்துள்ளார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்

# இளைஞர் அணி சார்பில் பகுதி - ஒன்றிய - நகர பேரூர் வாரியாக தெருமுனைக் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய ஒய்வறியா முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்களுக்காக நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, நாடே போற்றி பாராட்டும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி, மாவட்டந்தோறும் இளைஞரணி சார்பில் தெருமுனைக் கூட்டங்களை நடத்திட வேண்டுமென்று கழக இளைஞரணி செயலாளர், இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இளைஞரணி சார்பில் தெருமுனை பொதுக் கூட்டங்கள் கீழ்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

| நேரம் | பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் – | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|---|
| **நாள் : 20.05.2023 – சனிக்கிழமை** | | |
| மாலை 5 மணி | ஆலந்தூர் வடக்கு பகுதி | பத்மபிரியா |
| மாலை 7 மணி | ஆலந்தூர் தெற்கு பகுதி | கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் |
| மாலை 5 மணி | குன்றத்தூர் நகரம் | நாகம்மை கருப்பையா |
| மாலை 7 மணி | மாங்காடு நகரம் | |
| மாலை 5 மணி | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | முரசொலி மூர்த்தி |
| மாலை 7 மணி | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் & பேரூர் | |
| மாலை 5 மணி | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | குடியாத்தம் புவியரசி |
| மாலை 7 மணி | திருக்கழுக்குன்றம் பேரூர் | |
| மாலை 5 மணி | காட்டாங்கொளத்தூர் தெற்கு ஒன்றியம் | சைதை சாதிக் |
| மாலை 5 மணி | கண்டோன்மென்ட் நகரம் | தாயகம் கவி, எம்.எல்.ஏ |
| **நாள் : 21.05.2023 – ஞாயிற்றுக்கிழமை** | | |
| மாலை 5 மணி | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | கவிஞர் தமிழ் தாசன் |
| மாலை 5 மணி | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | பொன்னேரி சிவா |
| மாலை 7 மணி | மாமல்லபுரம் நகரம் | |
| மாலை 5 மணி | செங்கல்பட்டு நகரம் | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| மாலை 7 மணி | மறைமலைநகர் நகரம் | கந்திலி கரிகாலன் |
| மாலை 5 மணி | பம்மல் வடக்கு பகுதி | வண்ணை புகாரி |
| மாலை 7 மணி | பம்மல் தெற்கு பகுதி | தமிழன் பிரசன்னா |
| **நாள் : 22.05.2023 – திங்கள்கிழமை** | | |
| மாலை 7 மணி | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | செங்கை தாமஸ் |
| **நாள் : 23.05.2023 – செவ்வாய்கிழமை** | | |
| மாலை 5 மணி | பல்லாவரம் வடக்கு பகுதி | சென்னை அரங்கநாதன் |
| மாலை 7 மணி | பல்லாவரம் தெற்கு பகுதி | |
| மாலை 5 மணி | தாம்பரம் கிழக்கு பகுதி | ஆலந்தூர் மலர் மன்னன் |
| மாலை 7 மணி | தாம்பரம் மேற்கு பகுதி | |
| **நாள் : 24.05.2023 – புதன்கிழமை** | | |
| மாலை 5 மணி | செம்பாக்கம் வடக்கு பகுதி | செங்கை சந்தானம் |
| மாலை 7 மணி | செம்பாக்கம் தெற்கு பகுதி | |
| மாலை 5 மணி | பெருங்களத்தூர் வடக்கு பகுதி | எழும்பூர் கோபி |
| மாலை 7 மணி | பெருங்களத்தூர் தெற்கு பகுதி | |
| மாலை 5 மணி | காட்டங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | சேப்பாக்கம் பிரபாகரன் |
| மாலை 7 மணி | புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் | தமிழ் சாதிக் |
| **நாள் : 26.05.2023 – வெள்ளிக்கிழமை** | | |
| மாலை 5 மணி | திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | சேலம் சுஜாதா |
| மாலை 7 மணி | திருப்போரூர் பேரூர் | |


இத்தெருமுனை கூட்டங்களை, அந்தந்த பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், நல்ஒத்துழைப்புடன், அந்த அந்தந்த பகுதி ஒன்றிய நகர - பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் இணைந்து, இத்தெருமுனை கூட்டங்களை ஏற்பாடு செய்து,

இக்கூட்டங்களில் அந்தந்த பகுதி ஒன்றிய நகரங்களில் அடங்கிய நகர பேரூர் வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து இத்தெருமுனை கூட்டங்களை மிகவும் எழுச்சியான முறையில் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பசும்பொன் தா. கிருட்டிணன்
### மே 20 (2003)



**கல்லூரியில் பயிலும் போதே மாணவர் தி.மு.க.வில் தீவிரமாகப் பணியாற்றி அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற பெருந்தலைவராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**1996ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**